**OS.No.336/2018 P.W.1-மஞ்சுளா 01.09.2025**

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

எனக்கு 1995-ல் திருமணம் நடந்தது. என் பெற்றோருடன் நான் திருமணத்திற்கு முன்பு வசித்து வந்த நிலையில் பாலமுருகன் புரவிஷ்னல் ஸ்டோர்ஸ் எந்த ஆண்டு துவங்கப்பட்டது என்று எனக்கு தெரியாது என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல. பாலமுருகன் புரவிஷ்னல் ஸ்டோர்ஸ் என் தகப்பனாரால் நிறுவப்பட்டது. இளங்கோ என்பவர் யார் என்று கேட்டால் அந்த கடையில் வேலை பார்த்த நபராவார். அவர் எங்களுக்கு உறவினர். அவர் எனது பெரியம்மாள் மகன். மேற்படி இளங்கோ என் அப்பா நடத்திய கடையில் வேலை செய்த நபர். பிரதிவாதி குணராஜன் என்பவர் பாரிஷ் வியூஸ் கன்ஸ்டக்ஷன், திருச்சியில் வேலை செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் வேலை செய்யவில்லை. என் தகப்பனாரின் தகப்பனார் செல்லமுத்து என்பவருக்கு பூர்வீக கிராமமான வளைஎடுப்பு கிராமத்தில் சொத்து உள்ளதா என்றால் தற்போது இல்லை. முன்பு இருந்தது. என் தகப்பனார் அதை விற்றுவிட்டார். பாலமுருகன் ஹார்டுவேஸ் ஏஜென்சி நிறுவனத்தில் என் பெயரில் பங்கு உள்ளதை பற்றி தெரியுமா என்றால் எனக்கோ, என் குழந்தைகளுக்கோ உள்ளதா என்று தெரியாது. என் தகப்பனாருக்கு பங்கு இருந்தது. பாலமுருகன் ஹார்டுவேஸ் ஏஜென்சி நிறுவனத்தில் எனக்கு பங்கு இருந்தது என்றும், அதற்கான லாபத்தை மாத, மாதம் நான் பெற்று வந்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. அதற்குரிய தணிக்கையாளர் அறிக்கை உள்ளது என்றால் சரியல்ல. எனவே தணிக்கையாளர் இல்லை என்று நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. பங்கை பெற்றுக்கொண்டு தற்போது பங்கை பெறவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு 2006-ல் திருமணம் நடந்தது. அவருக்கு செய்யப்பட்ட திருமண செலவுகளின் விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. என் கணவர் தான் செய்தார். திருமணத்திற்கான செலவுகள் வளைஎடுப்பு கிராமத்தில் இருந்த சொத்தை விற்றும், பிரதிவாதியின் வருமானத்தை கொண்டும் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதியின் திருமணத்திற்கான செலவிற்கும், என் கணவருக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. உள்ளகரத்தில் வாங்கப்பட்ட நிலம் காலி மனையாக இருந்தது. அது கட்டிடமாக்கப்பட்டதா என்றால் தெரியாது. அது 1997ம் ஆண்டு வாங்கப்பட்டது என்றால் 1986ல் வாங்கப்பட்டது.

(நேரமின்மையால் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)